# வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி

## மூன்றாம் தவணைப்பரீட்சை - 2023(2024)

**தரம் - 06** **கர்நாடக சங்கீதம்** 525 **நேரம் : 2.00 மணி**

பகுதி - I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01) மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.

01) சங்கீதத்திற்கு ஆதாரமாகவுள்ள ஸ்வரங்கள்
1) 5 2) 3 3) 7 4) 12

02) லக்கைலாலாகை என்ற பாடலின் இராகம்
1) மாயாமாளவகௌளை 2) தோடி
3) சங்கராபரணம் 4) வலஜி

03) தமிழ்மொழி வாழ்த்துப் பாடலைப் பாடியவர்
1) புரந்தரதாசர் 2) திருவள்ளுவர்
3) சம்பந்தர் 4) சுப்பிரமணியபாரதியார்

04) கண்ணன் புரிந்தலீலை .................. எனும் பாடலின் தாளம்
1) ஆதி 2) ஏகம் 3) ரூபகம் 4) மட்டியம்

05) சுருதி வாத்தியத்திற்கு உதாரணம்
1) வயலின் 2) தம்புரா 3) மிருதங்கம் 4) நாதஸ்வரம்

**(5 x 2 = 10 புள்ளிகள்)**

02) தொடர்புபடுத்துக.

| அ | ஆ |
|---|---|
| 1. மருத்துவிச்சிப் பாடல் | நத்தார் |
| 2. வெசாக் | துந்தினா |
| 3. தோடுடையசெவியன் | குழந்தைபிறப்பு |
| 4. புத்தளிப்புக் கருவி | திருஞானசம்பந்தர் |
| 5. இயேசு பிறப்பு | வைகாசி மாதம் |

**(5 x 2 = 10 புள்ளிகள்)**

03) சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( ✗ ) எனவும் எனவும் அடையாளமிடுக.

01. சப்தஸ்வரங்கள் எட்டு ஆகும். ( )
02. சங்கீத்தில் தாளம் தாயைப் போன்றது. ( )
03. "சுருதி பிதா லய மாதா" என்பது சரியான கூற்றாகும். ( )
04. துருதத்தின் குறியீடு 0 ஆகும். ( )
05. வெளிக்களப் புத்தகம் தயாரித்தில் ஆக்கச் செயற்பாடாகும். ( )

**(5 x 2 = 10 புள்ளிகள்)**



kalvi.lk

04) கீறிட்ட இடங்களை நிரப்புக.

1. 15 வது மேளகர்த்தா இராகம் ................................................ ஆகும்.
2. நத்தார் பண்டிகையின் போது ................................................ இசைக்கப்படும்.
3. ............................................ சிறந்த நாதயோகி.
4. ஆரோகணத்தின் மறுபெயர் ................................................ ஆகும்.
5. அப்பியாசவரிசைகளை இயற்றியவர் ................................................ ஆவார்.

[ தியாகராஜர், கரோல் கீதங்கள், ஸ்ரீ புரந்தரதாசர், ஆரோசை, மாயாமாளவகௌளை ]

**(5 × 2= 10 புள்ளிகள்)**

## பகுதி - II

**பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

01) " சங்கீதம் என்பது ஒரு தெய்வீக கலையாகும்."
1. சங்கீதம் என்றால் என்ன?
2. நாதத்தின் வகைகளைக் குறிப்பிடுக.
3. சுருதி சேர்க்கப் பயன்படும் ஸ்வரங்கள் எவை?
4. சுருதி வாத்தியங்கள் 2 தருக.
5. ஆகதநாதம் என்றால் என்ன?
6. சங்கீதம் பயில்வதால் ஏற்படும் நன்மைகள் 3 தருக.

**(3+2+2+2+3+3=15 புள்ளிகள்)**

02) "இயற்கையாகவே இரஞ்சனையைக் கொடுக்கும் த்வனி ஸ்வரம் ஆகும்"
1. சப்தஸ்வரங்களினது வடமொழிப்பெயர்களையும், தமிழிசைப் பெயர்களையும் அட்டவணைப்படுத்துக.
2. ஆரோகணம் என்றால் என்ன?
3. அவரோகணத்தின் தமிழிசைப் பெயர் யாது?
4. ஆரோகணஸ்வரங்களினை படம் மூலம் வரைந்து காட்டுக.
5. பின்வரும் ஸ்வரங்கள் ஆரோகண,அவரோகண கிரமமா? எனக் குறிப்பிடுக.
   1) பதநிஸ் -
   2) நிதபம -
   3) கமபத -
   4) பமகரி -

**(7+2+2+2+2= 15 புள்ளிகள்)**

03) "தாளம் இல்லாத சங்கீதத்திற்கு பெருமை இல்லை. அதனை இரசிக்கவும் முடியாது"
1. தாளம் பற்றி மூன்று வசனங்கள் எழுதுக?
2. திரியாங்கம் இடம் பெறும் தாளம் எது?
3. தாளத்தின் அங்கங்களைக் குறிப்பிடுக.
4. திஸ்ரநடை என்பதன் விளக்கம் யாது?
5. சதுஸ்ரநடையின் சொற்கட்டு, அடசரம் யாது?
6. திஸ்ரநடையில் அமைந்த பாடல்கள் 3 இனைக் குறிப்பிடுக.

**(3+2+3+2+2+3= 15 புள்ளிகள்)**

04) எவையேனும் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
1. தைப்பொங்கல்
2. நத்தார்
3. புதுவருடப் பிறப்பு
4. வெசாக்

**(5 × 3= 15 புள்ளிகள்)**

05) முதலாவது ஸ்வரிசையை இராகம், தாளம், இயற்றியவர், ஆரோகணம், அவரோகணம் என்பன குறிப்பிட்டு அங்க அடையாளக் குறியீட்டுடன் முழுமையாக எழுதுக.

**( 15 புள்ளிகள்)**



kalvi.lk

## ONLINE CLASSES - 2025

*May*

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**